**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 20 of 2023**

**Prosecution Witness : PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வாசுதேவன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(A1, A2 Present)**

**Dated. 12.11.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம், ராம்ஜி நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 25.08.2022 ம் தேதி உதவி ஆய்வாளர் கேசவமூர்த்தி நிலைய பொறுப்பில் இருந்தபோது ஜெய்லாபுதீன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 153/2022, இதச பிரிவு 379 ன் கீழ் பதிவு செய்யப்பட்டு முதல் விசாரணை முடிக்கப்பட்டு, மேல் விசாரணைக்காக வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். உதவி ஆய்வாளர் கேசவமூர்த்தி தயார் செய்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜருடன் சம்பவ இடம் ஒத்திருந்ததால் தனியாக மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. அவர் விசாரணை செய்த சாட்சிகளை நானும் விசாரணை செய்ததில் அவரிடம் சொன்ன அதே வாக்குமூலத்தை என்னிடம் சொன்னதால் நான் தனியாக

வாக்குமூலம் எதவும் பதிவு செய்யவில்லை. சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 20.12.2022ம் தேதி 11.45 மணியளவில் மாந்துறை பஸ் ஸ்டாப் அருகே வாகன தணிக்கை நான் செய்து கொண்டிருந்த போது பதிவெண் இல்லாத XL Super Heavy Duty இருசக்கர வாகனத்தை நிறுத்த முற்பட்ட போது வாகனத்தை ஓட்டி வந்தவர்கள் எங்களை பார்த்ததும் தப்பியோட முயன்றவர்களை பிடித்து விசாரணை செய்தேன். பின்பு இவ்வழக்கின் எதிரிகளான அந்தோணிராஜ், சரவணன் ஆகியோரை கைது செய்தபோது 1ம் எதிரி அந்தோணிராஜ் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அன்பழகன், சசிக்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரிகள் ஓட்டி வந்த இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிக்கப்பட்ட XL Super Heavy Duty இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் 12.40 மணிக்கு கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் சாட்சிகளுடன் 1ம் எதிரி வீட்டிற்கு சென்று எதிரியின் வீட்டின் அருகே மறைத்து வைத்து எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த பதிவெண், இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் ஆகியவை அழிக்கப்பட்ட TVS XL Heavy Duty, TVS XL Super, Hero Honda Splender+ ஆகிய 3 வண்டிகளையும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சுமார் 14.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி, மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.11/அ.சா.6** ஆகும். பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு வழக்கு சொத்துகளை படிவம் எண். 91

மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் எண். 91 முறையே **அ.சா.ஆ.12/அ.சா.6 மற்றும் அ.சா.ஆ.13/அ.சா.6** ஆகும். என்னுடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரிகளின் மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரிகளின் மீது இதச பிரிவு 379 ன் கீழ் கடந்த 21.12.2022 குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

புகாரில் உள்ள சங்கதிகள் ஒரு பேனாவாலும், கையெழுத்து மற்றொரு பேனாவாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் யார் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வழக்கு சொத்தினை கைப்பற்றினேன் என்றால் சாட்சிகள் அன்பழகன், சசிக்குமார் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்தினை கைப்பற்றினேன். சாட்சிகள் அன்பழகன், சசிக்குமார் ஆகியோர் எதிரிகளை கைது செய்த இடத்திற்கும், வழக்கு சொத்தினை கைப்பற்றியதாக சொல்லப்படும் இடத்திற்கும் சம்மந்தப்பட்டவர்கள் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றாலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த வழக்கு சொத்துகளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் கேசவமூர்த்தியை விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். அவரை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் விசாரணை செய்தேன், வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. கைப்பற்றுதல் மகஜரில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்ட

இடத்தில் இருந்த நபர்களிடம் கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது புள்ளி விவரத்திற்காக எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2025.11.12 11:12:48 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி